FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318731

1. District : திருச்சி PS: உளவுத் துறை மற்றும் தீவிரவாத தடுப்பு பிரிவு Year: 2025 FIR No.: 11 Date: 25/9/2025
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.தக.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 24/9/25 Date to : 16.00hrs
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : Time to : 19.30hrs
நேர அளவு நேரம் முதல் 24/9/25 நேரம் வரை

(b) Information Received at PS. Date : 25/9/25 Time : 12.30hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் கணினியில் தட்டச்சுசெய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 3kms வடக்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : 1 எண் தேசிய நெடுஞ்சாலை ரோந்து வாகனம், கண்டோன்மெண்ட், திருச்சி.
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : கு. சரவணன் (b) Father's/ Husband's Name : கருப்பசாமி
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 20/7/74 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் /பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் முதுநிலை உதவியாளர் (g) Address : மாவட்ட ஆட்சியர் அலுவலகம் திருச்சி.
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. திரு.ப.முகமது அப்துல் காதர், உதவியாளர் [ரோந்து சார்வுரோன்] 1 எண் தேசிய நெடுஞ்சாலை ரோந்து வாகனம், திருச்சி

2. திரு.R.அரிபாஸ்கர், அலுவலக உதவியாளர், 1 எண் தேசிய நெடுஞ்சாலை ரோந்து வாகனம், திருச்சி

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதமில்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
25.9.2025

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
25/09/25

15 Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் G. MANIKANDAN.
Rank: நிலை DSP. V. Nagar Trichy.

கனம் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.11/2025–இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.....

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளராகிய நான், இன்று 25.09.2025 பணியில் இருந்த போது பிற்பகல் 12.30 மணியளவில் திருமதி.த.சுரேஷ், வயது.50/2025, த/பெ.தங்கவேலு, முதுநிலை வருவாய் ஆய்வர், மாவட்ட ஆய்வுகுழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் வளாகம், திருச்சி என்பவர் நிலையம் ஆஜராகி 24.09.2025ம் தேதி 1–எண். இணை சார்பதிவகம், கண்டோன்மென்ட், திருச்சி அலுவலகத்தில் திடீர் சோதனை செய்தபோது தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகளின்படி (மகஜர்) நடவடிக்கை எடுக்குமாறு புகார்மனு கொடுத்தார். அவர் கொடுத்த புகார்மனு, திடீர் சோதனை செயல்முறைகளின் (மகஜர்) மற்றும் திரு.அறிவழகன், வயது.55/2025, த/பெ.ரெங்கராஜன், அலுவலக உதவியாளர், 1–எண். இணை சார்பதிவகம், கண்டோன்மென்ட், திருச்சி என்பவர் எழுதி கொடுத்த கடித விபரங்கள் பின்வருமாறு திருச்சி 25.09.2025 அனுப்புநர் திரு.T.சுரேஷ், வயது.50/2025 த/பெ தங்கவேலு, முதுநிலை வருவாய் ஆய்வர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், திருச்சி மாவட்டம் பெறுநர் காவல் துணைக் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருச்சி. ஐயா, திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற தொலைபேசி இரகசிய தகவலின் அடிப்படையில், 24.09.2025ம் தேதி, மாலை சுமார் 4 மணியளவில், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரால் நியமிக்கப்பட்ட முதுநிலை வருவாய் ஆய்வராகிய என் தலைமையில், திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு.கோ.மணிகண்டன் ஆகிய தாங்கள் மற்றும் விஜிலென்ஸ் குழுவினருடன் திருச்சி மாவட்டம், 1–எண் இணை சார்பதிவகத்தை திடீர் சோதனை மேற்கொண்டோம். மேற்படி சோதனையின்போது. மேற்படி அலுவலகத்தின் ஹாலில் மேற்கு புறத்தில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க, அவர், தனது பெயர் அறிவழகன். வயது 55/2025, த/பெ.ரெங்கராஜன், அலுவலக உதவியாளர் என்றும், தான் 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவாகும் ஆவணங்களுக்கு முத்திரை இடும் பணியை செய்வதாக தெரிவித்தார். அவரை விசாரணை செய்ய அவரது அருகிலிருந்த அட்டைப் பெட்டியில் பணங்கள் சந்தேகத்திற்கிடமான வகையில் ரூ.500/– நோட்டுகளாக கிடந்தது. (ஒரு கட்டு லப்பர் பேண்டு சுற்றப்பட்டிருந்தது,) மேலும், ரூ.500/–, ரூ.200/–, ரூ.100/– நோட்டுகளாக கிடந்தது பற்றி கேட்க, அவர், அப்பணங்களை

எடுத்து ஆஜர் செய்தார். அவைகளை எடுத்து எண்ணிப்பார்க்க மொத்தம் ரூ.53,500/- இருந்தது. அதில், அந்த ரப்பர் பேண்டு சுற்றப்பட்டிருந்த 500 ரூபாய் நோட்டு கட்டில் இருந்த ரூ.40,000/- குறித்து கேட்க, அப்பணம் திருச்சி, தெற்கு காட்டூர், வ.உ.சி தெருவைச் சேர்ந்த திரு.அசோக்குமார் என்ற பத்திர எழுத்தர் திரு.கந்தசாமி என்பவர் செட்டில்மென்ட் பத்திரம் எழுதி பதிவு செய்ய(ஆவண எண்.6413/2025), 1 எண் இணை சார்பதிவகம், திருச்சிக்கு இன்று வந்தபோது பொறுப்பு சார்பதிவாளர் திரு.முகமது அப்துல் காதர் செட்டில்மென்ட் பத்திரம் பதிய பணம் கேட்டு, அப்பணத்தை தன்னிடம் கொடுக்க சொன்னதன் பேரில், தன்னிடம் அசோக்குமார் என்பவர் ரூ.40,000/-த்தை கொடுத்தார், அதை நான் வாங்கி வைத்திருந்தேன், மீதம் இருந்த பணத்தை பற்றி கேட்க, மற்ற தொகைகள் அனைத்தும் இன்று காலை முதல் 1 எண் இணை சார்பதிவகத்திற்கு வந்த பொதுமக்கள் பத்திர பதிந்து தர மற்றும் இதர பதிவுத்துறை அலுவலுக்காக பொறுப்பு சார்பதிவாளர் திரு.முகமது அப்துல் காதருக்காக தன்னிடம் கொடுத்து சென்றனர். அப்பணத்தை நான் மாலை பணி நேரம் முடிந்த பின்பு, பொறுப்பு சார்பதவாளர் திரு.முகமது அப்துல் காதரிடம் கொடுப்பேன் என்று தெரிவித்தார். மேலும், மேற்படி விபரங்களை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரால் நியமிக்கப்பட்ட முதுநிலை வருவாய் ஆய்வராகிய என் முன்பாக தனது கைப்பட எழுத்து மூலமாகவும் எழுதி கொடுத்தார். மேலும், அலுவலக உதவியாளர் அறிவழகன் கூறிய விபரங்களை பொறுப்பு சார்பதிவாளர் திரு.முகமது அப்துல் காதரிடம், நான் கேட்க அவர் எந்தவித விளக்கமும் கூறாமல் மௌனமாக இருந்தார். எனவே மேற்படி ரொக்கம் ரூ.53,500/=ம் பத்திர பதிவு செய்யவந்த ஆவண எழுத்தர் அசோக்குமார் மற்றும் பொதுமக்களிடமிருந்து கையூட்டாக கேட்டுப், அப்பணத்தை அலுவலக உதவியாளர் அறிவழகனிடம் வாங்கி வைத்திருக்க சொல்லியிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில், துணை காவல் கண்காணிப்பாளரால் இந்த திடீர் சோதனையில் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. இது குறித்து திடீர் சோதனை செயல்முறைகள் மாலை 4 மணி முதல் இரவு 7.30 மணிவரையில் தயார் செய்யப்பட்டது. மேற்படி திடீர் சோதனை செயல்முறையின் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் 24.09.2025ம் தேதி தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகள் மற்றும் திரு.அறிவழகன், வயது 55/2025, த/பெ. அலுவலக உதவியாளர், 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம் என்பவர் என்னிடம் எழுதி கொடுத்த கடிதம் ஆகியவை இணைக்கப்பட்டுள்ளது. இப்படிக்கு (Sd) (xxxx) த.சுரேஷ், 25.09.2025.

Joint-1 Sub-Registry-ல் தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறை (மகஜர்)

இன்று 24.09.2025 மாலை 16.00 மணிக்கு திருச்சி, கண்டோன்மென்ட், நீதிமன்ற வளாகத்தை ஒட்டி அமைந்துள்ள திருச்சி மாவட்டம், 1 எண் இணை சார்பதிவாளர் சார்பதிவகத்தில், பதிவு

உள்ளிட்ட ஏனைய அரசு அலுவல்களை செய்து கொடுக்க கூடி சார்பதிவக பணியாளர்கள், நேரடியாகவும், ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மூலமாகவும் கையூட்டு கேட்டுப்பெறுவதாக கிடைத்த தகவலின் பேரில், திருச்சி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது, அவர்களால் நியமிக்கப்பட்ட திரு.T.சுரேஷ், த/பெ தங்கவேலு, முதுநிலை வருவாய் ஆய்வர். மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் அவர்கள் தலைமையில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் திரு.மணிகண்டன் மற்றும் அவரது குழுவினர் உதவியுடன் மேற்கொள்ளும் திடீர் சோதனையின் செயல்முறை நடவடிக்கைகள் பொருத்து மடிக்கணினி மூலம் தயார் செய்யப்படும் செயல்முறை நடவடிக்கை மகஜர். திருச்சி, கண்டோன்மென்ட், ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தை ஒட்டி அமைந்துள்ள 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தை இன்று 24.09.2025 மாலை சுமார் 16.00 மணிக்கு கூடி அலுவலர்கள் கூடி சார்பதிவக அலுவலகத்தை முன்னறிவிப்பின்றி திடீர் சோதனை செய்வதற்கு கூடி சார்பதிவக அலுவலக முன்பக்க பிரதான கதவு வழியே உள்ளே நுழைந்தும் கூடி சார்பதிவகத்தை சுற்றி நான்கு திசைகளிலும் காவலர்களை பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டது. மேற்படி அலுவலகத்தின் உள்ளே ஹாலில் நின்று கொண்டிருந்த தனி நபர்களின் அருகில் காவலர்களை நிற்க செய்யப்பட்டது. அலுவலகத்தின் அனைத்து அறைகளுக்கும் காவலர்களை அனுப்பி பாதுகாப்புக்காக நிற்க செய்யப்பட்டது. சார்பதிவாளர் மற்றும் அங்கு பணியாற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குழுவினரையும், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரால் நியமிக்கப்பட்ட முதுநிலை வருவாய் ஆய்வர் திரு.T.சுரேஷ் தன்னையும், விஜிலென்ஸ் குழுவினரையும் அறிமுகப்படுத்தி கொண்டும், திடீர் சோதனை செய்ய வந்த விபரத்தை கூறியும் சோதனை தொடங்கப்பட்டது. சார்பதிவாளர் பெயரை கேட்க அவர் தன் பெயர் திரு.முகமது அப்துல் காதர், வயது 52/2025, த/பெ உமர் பரூக், உதவியாளர், பொறுப்பு சார்பதிவாளர் என்று தெரிவித்தார். மேற்படி அலுவலகத்தின் ஹாலில் இருந்த நபர்களை முதுநிலை வருவாய் ஆய்வர் விசாரிக்க, மேற்படி நபர்கள் பின்வருமாறு விபரம் தெரிவித்தார்கள்

வ.எண்.	பெயர் மற்றும் விலாசம்	கையிருப்புத்தொகை
1.	திரு.S.அருமை சின்னராஜ், வயது 38/25, த/பெ. சவரிநாதன், வழக்கறிஞர்,நெ.3/306, நரிமேடு, இலால்குடி தாலுகா, திருச்சி மாவட்டம். (ஆவண நகல் பெறுவதற்காக.)	ரூ.150/–

2.	திரு.காத்தவராயன், வயது 60/25, த/பெ கந்தசாமி, 3/393A, அண்ணாநகர், சா.அய்யம்பாளையம், மண்ணச்சநல்லூர் தாலுகா, திருச்சி. (ஆவண நகல் பெற)	ரூ.4000/=
3.	திரு.குமரேசன் வயது 39/25, த/பெ கலியபெருமாள், நெ.37, RS புரம், காஜாமலை ரோடு, திருச்சி. (CKP Promoters சார்பாக பத்திரம் எழுதி கொடுக்க)	ரூ.5700/=
4.	திரு.சக்திவேல், வயது 31/25, த/பெ பாண்டியன், RS புரம், காஜாமலை ரோடு, திருச்சி. (CKP Promoters சார்பாக சாட்சி கையெழுத்திட)	ரூ.120/–
5.	திரு.அப்துல் அஜீஸ், வயது 27/25, த/பெ காதர்ஷா, எண்.378, 9வது தெரு, அன்பிலார் நகர், எடமலைப்பட்டி புதூர், திருச்சி–12. (பத்திரம் நகல் வாங்க)	ரூ.2000/=
6.	திரு.குமரேசன், வயது 38/25, த/பெ குணசேகரன், 183 B, பொன்னகர், 9வது குறுக்குத்தெரு, திருச்சி. (MOD Cancel செய்ய)	ரூ.680/–
7.	திரு.சிவக்குமார், வயது 25/25, த/பெ பாலன், 1/72G, கிழக்குத்தெரு, காவல்காரன்பட்டி, கரூ மாவட்டம்.(பத்திரம் நகல் வாங்க)	ரூ.200/=
8.	நித்யா, வயது 42/25, த/பெ ராஜு, எண்.113, அருணா அவென்யூ, கருமண்டபம், திருச்சி. (MOD தொடர்பாக)	ரூ.50/=
9.	திரு.கார்த்திக், வயது 23/25, த/பெ பாஸ்கரன், எண்.11/27, கீழபடையாச்சித்தெரு, பாலக்கரை, திருச்சி.(MOD cancel தொடர்பாக)	----
10.	திருமதி.மீனாகுமாரி, 52/25 க/பெ சிவக்குமார், 2/53, முல்லைநகர், கே.கள்ளிக்குடி, ராம்ஜிநகர், திருச்சி. (MOD Cancel தொடர்பாக)	ரூ.200/–
11	திரு.ஸ்ரீராம், வயது 65/25, த/பெ கோபாலகிருஷ்ணன், 42, 5வது தெரு, Ex-Servicemen colony, பொன்மலை, திருச்சி. (பத்திர பதிய)	---

மேற்படி பணம் பற்றி அவரவர்களை கேட்க, அந்த பணம் தங்களுடைய சொந்தப்பணம் என்றும் அதற்கான விபரம் தெரிவித்ததால், மேற்படி பணம் அவர்களிடமிருந்து கைப்பற்றப்படவில்லை. மேற்படி ஹாலின் வடக்கு பக்கம் உள்ள சுவர் அருகே, தெற்கு பார்த்து சார்பதிவாளர் இருக்கை உள்ளது அதில் பொறுப்பு சார்பதிவாளர் திரு.முகமது அப்துல் காதர் அமர்ந்திருந்தார், அவருக்கு வலது பக்கம் ஒரு நபர் அமர்ந்திருந்தார். அவரது பெயர் மற்றும் பதவி பற்றி விசாரிக்க, அவரது பெயர் சரவணன், த/பெ பழனி, Data Entry Operator என்றும் தான் பத்திரம் பதிவு செய்யும், ஆவணம் வாங்குபவர் மற்றும் விற்பனை செய்பவர்களை புகைப்படம் எடுத்தல் பணியை செய்வதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் பற்றி முதுநிலை வருவாய் ஆய்வர் திரு.T.சுரேஷ் கேட்க, தன்னிடம் இருந்த சொந்தப்பணம் என்று சொல்லி ரூ.700/=ஐ எடுத்து ஆஜர் செய்ய, அது தனது சொந்தப்பணம் என்று தெரிவித்ததால், அப்பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. அதனை அடுத்து, வலது பக்கம், திருமதி.உமாசங்கரி, வயது 30/25, Camera Operator என்றும், தான் Document ஐ CD பதிவேற்றம் செய்யும் பணியை செய்வதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் பற்றி முதுநிலை வருவாய் ஆய்வர் திரு.T.சுரேஷ் கேட்க, தன்னிடம் இருந்த கைப்பியிலிருந்து சொந்தப்பணம் என்று சொல்லி ரூ.110/=ஐ எடுத்து ஆஜர் செய்ய, சார்பதிவாளர் அலுவலக கையிருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்க்க சரியாக இருந்ததால், அப்பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. அதனை அடுத்து, வலது பக்கம், V.கீதா, வயது 43/25, Data Entry Operator என்றும், தான் Document Scan செய்யும் பணியை செய்வதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் பற்றி முதுநிலை வருவாய் ஆய்வர் திரு.T.சுரேஷ் கேட்க, தன்னிடம் இருந்த கைப்பியிலிருந்து சொந்தப்பணம் என்று சொல்லி ரூ.700/=ஐ எடுத்து ஆஜர் செய்ய, சார்பதிவாளர் அலுவலக கையிருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்க்க சரியாக இருந்ததால், அப்பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. மேற்படி அலுவலகத்தின் கிழக்கு பக்கம் பார்த்து அமர்ந்திருந்த நபரை விசாரிக்க, அவர் தனது பெயர் நவநீத ரங்கராஜ பிரபு, உதவியாளர் என்றும் தான் Manual EC எடுத்து கொடுக்கும் பணியை செய்வதாகவும் தெரிவித்தார், அவரிடம் உள்ள பணம் பற்றி முதுநிலை வருவாய் ஆய்வர் திரு.T.சுரேஷ் கேட்க, தன்னிடம் இருந்த பேண்ட் பாக்கெட்டிலிருந்து சொந்தப்பணம் என்று சொல்லி ரூ.340/=ஐ எடுத்து ஆஜர் செய்ய, சார்பதிவாளர் அலுவலக கையிருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்க்க சரியாக இருந்ததால், அப்பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. மேற்படி அலுவலகத்தின் இடது பக்கம் இருந்த கண்ணாடி தடுப்பிலான அறையினுள் இருந்த நபர்களை ஆய்வுக்குழு அலுவலர் விசாரிக்க, (1) திருமதி.ரம்யா, வயது

38/25, இளநிலை உதவியாளர் என்றும் தான் Online EC தொடர்பான பணியை செய்வதாக தெரிவித்தார், அவரிடம் உள்ள பணம் பற்றி முதுநிலை வருவாய் ஆய்வர் திரு.T.சுரேஷ் கேட்க, தன்னிடம் இருந்த தனது கைப்பையிலிருந்து சொந்தப்பணம் என்று சொல்லி ரூ.190/=ஐ எடுத்து ஆஜர் செய்ய, சார்பதிவாளர் அலுவலக கையிருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்க்க சரியாக இருந்ததால், அப்பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. (2) திருமதி.மணிமேகலை, வயது 42/25, த/பெ மருதமுத்து, நெ.30, ரெங்கா நகர், இனாம் சமயபுரம், திருச்சி என்றும், தான் தற்காலிக பணியாளர் என்றும், சார்பதிவாளர் திரு.முகமது அப்துல் காதர் அவர்கள் Index Correction தொடர்பான பணியை செய்வதற்கு தன்னை அழைத்தால், தான் 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்து Index Correction பணிணை செய்து கொடுப்பேன் என்றும், அதற்காக நான் பணிக்கு வரும் நாள் ஒன்றிற்கு ரூ.300/- சம்பளமாக கொடுப்பார் என்றும் தெரிவித்தார். மேலும் அவரிடம் உள்ள பணம் குறித்து ஆய்வுக்குழு அலுவலர் கேட்க தன்னிடம் ரூ.900/- வைத்திருப்பதாக எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து ஆய்வுக்குழு அலுவலர் கேட்க அது தனது சொந்தப்பணம் என்றும், தனது மருத்துவ செலவிற்காக வைத்திருப்பதாகவும் தெரிவித்ததால், அப்பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் ஹாலிற்கு அடுத்து இருந்த பதிவு வைப்பறை வாசலில் அருகே நின்றுகொண்டிருந்த நபரை ஆய்வுக்குழு அலுவலர் விசாரிக்க, தனது பெயர் முருகானந்தம், வயது 50/25, பதிவறை எழுத்தர் என்று தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் பற்றி முதுநிலை வருவாய் ஆய்வர் திரு.T.சுரேஷ் கேட்க, தன்னிடம் பணம் எதுவும் இல்லை என்று தெரிவித்தார். மேலும் பதிவறையின் உள் பகுதியில் இருந்த நபரை ஆய்வுக்குழு அலுவலர் விசாரிக்க, தனது பெயர் தினேஷ்ராஜா, வயது 23/25, த/பெ அண்ணாதுரை, 3/310, சாந்தபுரம், குடித்தெரு, அல்லித்துறை, திருச்சி என்றும், தான் தற்காலிக பணியாளர் என்றும், சார்பதிவாளர் திரு.முகமது அப்துல் காதர் அவர்கள் தன்னை பதிவைப்பறையில் ஆவணங்கள் பதிவு மேற்கொள்ளுவதற்கு அழைப்பார் என்றும், அதற்காக தான் பணிக்கு வரும் நாள் ஒன்றிற்கு ரூ.200/- சம்பளமாக கொடுப்பார் என்றும் தெரிவித்தார். மேலும் அவரிடம் உள்ள பணம் குறித்து ஆய்வுக்குழு அலுவலர் கேட்க தன்னிடம் பணம் எதுவும் இல்லை என்று தெரிவித்தார். மேற்படி அலுவலகத்தில் சார்பதிவாளருக்கு இடது பக்கம் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க, அவர் தனது பெயர் திருமதி.ஜெனிஃபர் பாரதி, வயது 45/25, உதவியாளர் என்றும் தான் Onlineல் பதிவேற்றம் செய்யப்பட்ட ஆவணங்களை சரிபார்த்தல் மற்றும் அலுவலக Audit பணிகளை செய்வதாகவும் தெரிவித்தார், அவரிடம் உள்ள பணம் பற்றி முதுநிலை வருவாய் ஆய்வர் திரு.T.சுரேஷ் கேட்க, தன்னிடம் இருந்த

தனது கைப்பையிலிருந்து சொந்தப்பணம் என்று சொல்லி ரூ.300/=ஐ எடுத்து ஆஜர் செய்ய, சார்பதிவாளர் அலுவலக கையிருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்க்க சரியாக இருந்ததால், அப்பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. மேற்படி அலுவலகத்தின் ஹாலில் மேற்கு பார்த்து அமர்ந்திருந்த நபரை ஆய்வுக்குழு அலுவலர் விசாரிக்க, தனது பெயர் அறிவழகன், வயது 55/25, அலுவலக உதவியாளர் என்றும், தான் 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவாகும் ஆவணங்களுக்கு முத்திரை இடும் பணியை செய்வதாக தெரிவித்தார். அவரிடம் வைத்திருக்கும் ரொக்கம் குறித்து ஆய்வுக்குழு அலுவலர் கேட்க, அவர் தனது சட்டை பாக்கெட்டிலிருந்து ரூ.50/– எடுத்து ஆஜர் செய்தார். அப்பணம் குறித்து கேட்க, அது தனது சொந்தப்பணம் என்று தெரிவித்ததால், அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவரது அருகிலிருந்த அட்டைப் பெட்டியில் பணங்கள் சந்தேகத்திற்கிடமான வகையில் ரூ.500/– நோட்டுகளாக கிடந்தது. (ஒரு கட்டு லப்பர் பேண்டு சுற்றப்பட்டிருந்தது,) மேலும், ரூ.500/–, ரூ.200/–, ரூ.100/– நோட்டுகளாக கிடந்தது பணங்கள் குறித்து கேட்க, அப்பணங்களை எடுத்து ஆஜர் செய்தார், அவைகளை எடுத்து எண்ணிப்பார்க்க மொத்தம் ரூ.53,500/– இருந்தது. அதில், அந்த ரப்பர் பேண்டு சுற்றப்பட்டிருந்த 500 ரூபாய் நோட்டு கட்டில் இருந்த ரூ.40,000/– குறித்து கேட்க, அப்பணம் திருச்சி, தெற்கு காட்டூர், வ.உ.சி தெருவைச் சேர்ந்த திரு.அசோக்குமார் என்ற பத்திர எழுத்தர் திரு.கந்தசாமி என்பவர் செட்டில்மென்ட் பத்திரம் எழுதி பதிவு செய்ய(ஆவண எண்.6413/2025), 1 எண் இணை சார்பதிவகம், திருச்சிக்கு இன்று வந்தபோது பொறுப்பு சார்பதிவாளர் திரு.முகமது அப்துல் காதர் செட்டில்மென்ட் பத்திரம் பதிய பணம் கேட்டு, அப்பணத்தை என்னிடம் கொடுக்க சொன்னதன் பேரில், என்னிடம் அசோக்குமார் ரூ.40,000/–த்தை கொடுத்தார், அதை நான் வாங்கி வைத்திருந்தேன், மீதம் இருந்த ரொக்கங்கள் அனைத்தும் இன்று காலை முதல் 1 எண் இணை சார்பதிவகத்திற்கு வந்த பொதுமக்கள் பத்திர பதிந்து தர மற்றும் இதர பதிவுத்துறை அலுவலுக்காக பொறுப்பு சார்பதிவாளர் திரு.முகமது அப்துல் காதருக்காக என்னிடம் கொடுத்து சென்றனர். அப்பணத்தை நான் மாலை பணி நேரம் முடிந்த பின்பு, பொறுப்பு சார்பதவாளர் திரு.முகமது அப்துல் காதரிடம் கொடுப்பேன் என்று தெரிவித்தார். மேலும், மேற்படி விபரங்களை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரால் நியமிக்கப்பட்ட முதுநிலை வருவாய் ஆய்வர் திரு.சுரேஷ் முன்பாக தனது கைப்பட எழுத்து மூலமாகவும் எழுதி கொடுத்தார். மேலும், அலுவலக உதவியாளர் அறிவழகன் கூறிய விபரங்களை பொறுப்பு சார்பதிவாளர் திரு.முகமது அப்துல் காதரிடம் முதுநிலை வருவாய் ஆய்வர் திரு.சுரேஷ் கேட்க அவர் எந்தவித விளக்கமும் கூறாமல் மௌனமாக இருந்தார். எனவே மேற்படி ரொக்கம் ரூ.53,500/=ம் பத்திர பதிவு செய்யவந்த

ஆவண எழுத்தர் அசோக்குமார் மற்றும் பொதுமக்களிடமிருந்து கையூட்டாக கேட்டுப்பெற்று வைத்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில், துணை காவல் கண்காணிப்பாளரால் இந்த திடீர் சோதனையில் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. இன்று 1 எண் இணை சார்பதிவாளர் திருச்சி அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை சரிபார்த்ததில் 'அ, பதிவேட்டு கணக்கில் 48 பதிவுகள் செய்யப்பட்டு, அதற்கான தொகை ஆன்லைன் epayment மூலமாக ரூ.88,28,042/= (முத்திரைத்தாள் கட்டணங்கள் உட்பட) கட்டணமாக வசூல் செய்யப்பட்டுள்ளது. B கணக்கில் இன்றைய தினம் ரூ.505/= கட்டணமாக வசூல் செய்யப்பட்டுள்ளது. D கணக்கில் ரூ.64,568/= கட்டணமாக வசூல் செய்யப்பட்டுள்ளது. CD கட்டணமாக ரூ.5,000/=ம் வசூல் செய்யப்பட்டுள்ளது. உட்பிரிவு கட்டணமாக ரூ.18,000/= வசூல் செய்யப்பட்டுள்ளது. பதிவுத்திருமண கட்டணமாக ரூ.260/= வசூல் செய்யப்பட்டுள்ளது. இவை அனைத்தும் onlineல் செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி கணக்கு விபரங்களை உதவியாளர் திருமதி.ஜெனிஃபர் பாரதியிடம் சான்றொப்பமிட்ட நகலாக பெறப்பட்டது. கொடி நாள் வசூல் தொடர்பாக சார்பதிவாளரிடம் கேட்க, ரூ.4,500/– வசூல் செய்யப்பட்டு செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார். மேற்படி அலுவலகம் முழுவதும் போதிய மின்சார வசதி செய்யப்பட்டு இருந்தது. மேற்படி திடீர் சோதனையின்போது பணம் கைப்பற்றும் நடவடிக்கைகள் வீடியோ காமிரா மூலம் பதிவு செய்யப்பட்டது. இந்த திடீர் சோதனை இரவு 19.30 மணிக்கு முடிக்கப்பட்டது.

Joint-1 Sub-Registry-ல் 24.09.2025ந்தேதி தயார் செய்யப்பட்ட மகஜரின்போது மேற்படி அலுவலகத்தின் அலுவலக உதவியாளர் திரு.அறிவழகன் என்பவர் தானாக முன்வந்து எழுதி கொடுத்த கடிதம் விபரம் மாவட்ட ஆய்வு குழு ஆய்வர், திருச்சி மாவட்டம் முன்பாக இன்று 24.09.2025ம்தேதி இணை சார்பதிவகம் 1ல் (கண்டோன்மென்ட்) நடந்த திடீர் ஆய்வின்போது என் இருக்கை அருகே சந்தேகத்திற்கு இடமான வகையின் அட்டைப்பெட்டியில் கிடந்த ரூபாய் நோட்டுகளை சந்தேகப்பட்டு தாங்கள் கேட்க நான் ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தேன். அதில் ரூபாய் 40,000 ஒரு கட்டாகவும், ரூ.13,500 உதிரி பணங்களாகவும் இருந்தது. அந்த ரூ.40,000/– குறித்து தாங்கள் கேட்டீர்கள். பணமாக ஆவண எழுத்தர் திருச்சி, தெற்கு காட்டூர் அசோக்குமார் என்பவர் கொடுத்தது என்பதை தெரிவித்தேன். திரு.அசோக்குமார், ஆவண எழுத்தர் திரு.கந்தசாமி என்பவரது செட்டில்மென்ட் பத்திரம் பதிய சார்பதிவாளர் திரு.முகமது அப்துல் காதர் கேட்டு வாங்கி என்னிடம் கொடுத்ததாகும். மீத இருந்த ரூ.13,500–ம் இன்று இணை சார்பதிவகம் 1க்கு பத்திரம் பதிய மற்றும் பணிகளுக்காக வந்த பொதுமக்களிடம் சார்பதிவாளர் திரு.முகமது அப்துல் காதர் கேட்டு வாங்கி என்னிடம்

கொடுத்தாகும். எனது சட்டைப்பாக்கெட்டில் ரூ.50 மட்டும் இருந்தது பணம் குறித்து கேட்டீர்கள் அது எனது சொந்தப்பணம் என தெரிவித்தேன். இப்படிக்கு (Sd.xxxxx) R.அறிவழகன் 24.09.2025. என் முன்பாக பதிவு செய்யப்பட்டது. (Sd.xxxxx) த.சுரேஷ், 27.09.2025 முதுநிலை வருவாய் ஆய்வர், ICO அலுவலகம், திருச்சி Submitted to the Court of the Hon'ble Principal District and Sessions Judge, Trichy. Received this report along with Surprise Check Mahazar drawn on 24.09.2025 and one petition given by Tr.Arivazhagan, age.55/2025, s/o Rengarajan, Office Assistant, Joint-1 Sub-Registry, Cantonment, Trichy perused these items and registered a case in Trichy V&AC Cr.No.11/2025 u/s 7(a) of Prevention of Corruption Act-1988 (as amended in 2018) on 25.09.2025 at 13.00 hrs (Sdxxxx), G.Manikandan, 25.09.2025, Dy. Supdt. of Police, V&AC, Trichy.

25/09/25
(G.MANIKANDAN)
DSP. V&AC.
TRICHY.